அறிவிக்கப்பட்டது. ஆனால் மெரினா கடற்கரைச் சாலை சுங்க இலாகா அலுவலகத்திலிருந்து அகில இந்திய வானொலி நிலையம் வரை உள்ள பகுதி சென்னை மாநகராட்சி மன்றத்தால் பராமரிக்கப் படுகிறது எனவும், மேற்படி சாலையில் பொதுப்பணித் துறை அலுவலகங்களுக்கு எதிரே உள்ள குறைபாடுகள் மாநகராட்சி மன்றத்தால் கவனிக்கப்பட்டன என்றும் இப்போது தகவல் கிடைத்துள்ளது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

4. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் எண் 18/1968) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை அவை மசோதா எண் 18/1968).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1968-ம் ஆண்டு, வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைகள் ஆவண மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 18/1968) மீதான ஆய்வுக் குழுவின் அறிக்கையை * அவை முன் அளிக்கிறேன்.

(இ) தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இம் மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

5. முதலமைச்சரின் உடல்நிலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உடல்நிலைபற்றிய அறிக்கையை மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நேற்றுக் காலை சிறிதளவு மார்பு வலி ஏற்பட்டது. டாக்டர்கள் தக்க சிகிச்சை அளித்து, தூக்கத்திற்கான மருந்தும் அளித்தனர். பிறகு மார்பு வலி தணிந்தது, சிறிது பிராணவாயு தரப்பட்டது என்றும், இனி அது தேவைப்படாது என்றும் டாக்டர்கள் கூறுகிறார்கள். ரேடியம்

* 1969 சனவரி 29-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஊசி பொருத்தப்பட்டிருப்பதன் விளைவாக மார்பு வலி ஏற்படுகிறது என்றும், ஓரிரு நாட்களில் மார்புவலி நின்றுவிடும் என்றும் கூறு கிறார்கள். உணவு திரவப் பதார்த்தமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

நேற்று நண்பகலுக்குப் பிறகு நல்ல உறக்கம் கொண்டார்கள். மாலையிலும் இரவிலும் திரவ உணவு உட்கொண்டார்கள்.

நேற்று இரவுப்பொழுதை நல்ல உறக்கத்தோடு அமைதியாகக் கழித்தார்கள். இரத்த அழுத்தம், நாடித் துடிப்பு, உஷ்ணநிலை எல்லாம் சீரான நிலைமையில் இருந்து வருகின்றன என்று டாக்டர் கள் கூறியுள்ளார்கள்.

இன்று காலை அவர்கள் உடல்நலம் சீர்பெற்ற நிலையில் இருக் கிறது.

2. தகவல் கோருதல்—தொடர்ச்சி.

(இ) பேரவைத் தலைவரின் முன் அனுமதியின்றி ஒரு சம்பவம்பற்றி விளக்கம் கோருதல்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நேற்று இந்தச் சட்டசபை எல்லைக்குள் நடந்திருக்கக்கூடிய ஒரு சம்பவத்தைப்பற்றித் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதுபற்றி நோட்டீஸ் கொடுக்காமலேயே உறுப்பினரவர்கள் இந்த இடத்திலே எழுந்து பேசுவது முறையாக இருக்காது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, நான் அனுமதி கேட்பதற்காகத்தான் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கோதண்ட ராமன் அவர்கள் நேற்று நிகழ்ச்சியைப்பற்றிப் பேச இப்பொழுது எழுந்து நிற்கிறார்கள். நான் அதற்குத் தீர்ப்புக் கொடுத்திருக் கிறேன். எந்தப் பிரச்சினையையும் பேரவைத் தலைவரின் அனுமதி இல்லாமல் நீங்கள் எழுப்பக்கூடாது. அதையே மீண்டும் பேசுவ தற்கு அனுமதி அளிக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அனுமதி கேட்டுப் பேச வேண்டியதுதான். அதைத்தான் தங்களிடம் கேட்க ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதற்கு முன்பே அறிவிக்கை கொடுத்துவிட்டுப் பேச வேண்டும். இப்பொழுது நீங்கள் எதற்காக எழுந்து பேசப் போகிறீர்கள் என்பது தெரியாமல் நான் உங்களுக்குப் பேச வாய்ப்பு அளிப்பது முறையாக இருக்காது.